# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

<u>ஆணை நாள் 09.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

### மாநிலத் தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 9481/B/18</u>**

| | | |
|---|---|---|
| திரு.K.சுப்புராஜ் | | மேல்முறையீட்டாளர் |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வெம்பக்கோட்டை<br>விருதுநகர் மாவட்டம் | எதிர் | பொது அதிகார அமைப்பு |

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தால் இன்று (09.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.K.சுப்புராஜ் அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு கே.பஞ்சவர்ணம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 21.06.2018 தேதியிட்ட மனுவில், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலூக்கா, சங்கரபாண்டியபுரம் கிராமம், புல்லக்கவுண்டன்பட்டி கிராமத்தில், சங்கரபாண்டியபுரம் கிராம புல எண் 78/1, 79/1, 80/1ன் படி பட்டா எண் 232ன்படி 1-45 ஹெக்டேர் புஞ்சை நிலம் சாத்தூர் தாலூக்காவில் இருந்த நிலம், தாலூக்கா மாற்றத்தின் போது வெம்பக்கோட்டை தாலூக்காவிற்கு மாற்றம் செய்த சங்கரபாண்டியபுரம் கிராமத்திற்கான பட்டா எண் 232ன்படி இராமசாமி என்பவரின் பெயரை சேர்த்து கூட்டுப்பட்டாவாக மாற்றப்பட்டுள்ளது என்பது குறித்தும், மேலும் இது சம்பந்தமாகவே

4 இனங்களில் தகவல் கோரி விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 24.09.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 13.12.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 06.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, அதன் நகலை சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலூக்கா, சங்கரபாண்டியபுரம் கிராமம், புல்லக்கவுண்டன்பட்டி கிராமத்தில், சங்கரபாண்டியபுரம் கிராம புல எண் 78/1, 79/1, 80/1ன் படி பட்டா எண் 232ன்படி 1-45 ஹெக்டேர் புஞ்சை நிலம் சாத்தூர் தாலூக்காவில் இருந்த நிலம், தாலூக்கா மாற்றத்தின் போது வெம்பக்கோட்டை தாலூக்காவிற்கு மாற்றம் செய்த சங்கரபாண்டியபுரம் கிராமத்திற்கான பட்டா எண் 232ன்படி இராமசாமி என்பவரின் பெயரை சேர்த்து கூட்டுப்பட்டாவாக மாற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி நிலம் 25 ஆண்டுகளாக தனது பெயரில் தனிப்பட்டாவாக உள்ளது என்றும், ஆகையால் தனது பெயரிலேயே தனிப்பட்டா வழங்கும்படியும் ஆணையத்திடம் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேற்படி புலங்கள் உட்பிரிவிற்கு முன்னர் கடந்த 1980 ஆம் ஆண்டில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக கிரய ஆவணம் எண் 1493/1980 நாள் 25.04.1980ன்படி சங்கர பாண்டியாபுரம் கிராமம் உட்கடை புல்லக்கவுண்டன்பட்டி கிராமத்தினைச் சேர்ந்த வழக்குதாரரான கிருஷ்ணசாமி நாயக்கர் மகன் சுப்புராஜ் மற்றும் அவரது சகோதரரான ராமசாமி ஆகிய இருவரும் சேர்ந்து மேற்படி ஊரில் குடியிருந்து காலமான சாமி நாயக்கர் என்பவரது இரண்டாவது மகன் வரதராஜ் நாயக்கர் என்பவரிடமிருந்து தங்களது இருவரது பெயர்களிலும் கூட்டாக கிரயம் பெற்றுள்ளனர் என்றும், அதன்பின்னர் மேற்படி கிரய ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரின் சகோதரரும் கூட்டுக்கிரயதாரருமான கிருஷ்ணசாமி மகன் ராமசாமி என்பவரது 21.02.2017 நாளிட்ட பட்டா மாறுதல் கோரிக்கை ஆன்லைன் மனுவின் பேரில், சங்கரபாண்டியபுரம் கிராம நிர்வாக அலுவலரது 03.03.2017 நாளிட்ட பரிந்துரை அறிக்கையினை பரிசீலித்து வெம்பக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியரால் ராமசாமி என்பவரது பெயரையும், பட்டா எண் 232ல் கூட்டாக சேர்த்து 20.03.2017 அன்று TK2017/01031/26/017222ன்படி பட்டா மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது என்றும் ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தீர விசாரித்து வழங்க வேண்டிய காரணத்தால், கால அவகாசம் அளிக்கும் பட்சத்தில், 15 நாட்களுக்குள் மனுதாரருக்கு வழங்கி விடுவதாக விசாரணையின்போது உறுதியளித்தார். அதற்கு மனுதாரரும் சம்மதம் தெரிவித்தார்.

6. இச்சூழ்நிலையில், இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

**பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தில் உறுதியளித்தப்படி, மனுதாரருக்குரிய SLR தகவலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து ஆணையத்திற்கு 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிடுகிறது.**

**தவறும் பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு எச்சரிக்கிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9481/B/18**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வெம்பக்கோட்டை
விருதுநகர் மாவட்டம்

திரு.K.சுப்புராஜ்,
எண்.16, அன்னை இந்திரா நகர்
அநெக்ஸ் XI,
திருநின்றவூர்,
சென்னை - 602 024

Copy to: File / Stock File
SC/PA/12.09.2019